இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 08-07-2025

# இலங்கை அரசிடம் இந்திய அரசு பேச வேண்டும்!

கச்சத்தீவை ஒருபோதும் விட்டுத் தர மாட்டோம் என்று இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் விஜிதா ஹெராத் திட்டவட்டமாகத் தெரிவித்து இருக்கிறார். இந்திய மீனவர்கள் மீது அவதூறான கருத்துகளை ஆணவமாகத் தெரிவித்து இருக்கிறார்.

“கச்சத்தீவு கடல் பகுதியில் மீன் பிடிப்பதற்காக இந்திய மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைகின்றனர். அவர்கள் மீன் வளங்களைக் கொள்ளையடிப்பதோடு கடல் தாவரங்களையும் கடுமையாக சேதப்படுத்துகின்றனர். இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் தொடர்ந்து சட்டவிரோதமாக மீன் பிடிப்பதற்கு இந்திய அரசும் ஆதரவளிக்கவில்லை என்பதையும் நாங்கள் அறிவோம். இந்தப் பிரச்சினைக்கு தூதகர ரீதியில் தீர்வு காண இலங்கை தயாராக உள்ளது. சர்வதேச சட்டங்களின் படி நிறுவப்பட்ட கச்சத்தீவை ஒருபோதும் விட்டுத் தர மாட்டோம். இந்தியாவில் காங்கிரஸ், பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகள் அரசியல் காரணங்களுக்காகவே கச்சத்தீவு விவகாரத்தை எழுப்புகின்றன” என்று வாய்க்கு வந்ததை எல்லாம் பேசி இருக்கிறார் இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் விஜிதா ஹெராத்.

கச்சத்தீவு மீட்கப்பட வேண்டும் என்பதை அரசியல் காரணங்களுக்காக எழுப்பவில்லை. இந்திய மீனவர்களின் வாழ்வுரிமையின் அடிப்படையில்தான் எழுப்புகிறோம். கடல் தாண்டி வந்ததாகச் சொல்லி இந்திய மீனவர்களைக் கைது செய்து சிறையில் அடைப்பதையும், படகுகளை பறிமுதல் செய்வதையும், பறிமுதல் செய்யப்பட்ட படகுகளுக்கு லட்சக்கணக்கில் அபராதம் போடுவதையும் இலங்கை அரசு தொடர்ச்சியாகச் செய்து வருகிறது. கைது செய்வதும், அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு அரசானது இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுப்பதும், இந்திய அரசு உடனடியாக இலங்கை அரசுக்கு கோரிக்கை விடுப்பதும் தொடர்ந்து நடக்கிறது. ஆனாலும் கைது நடவடிக்கையை இலங்கை நிறுத்தவில்லை.

**இலங்கைக் கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழையவில்லை. இலங்கையின் மீன் வளங்களை கொள்ளையடிப்பது இல்லை. இந்திய மீனவர்கள் வைத்திருக்கும் மீன்கள்தான் சிங்கள கடற்படையால் பறிக்கப்படுகிறது. மீனவர்களின் வலைகள் அறுக்கப்படுகிறது. நமது மீனவர்கள் தாக்கப்படுகிறார்கள். இதன் உச்சமாகச் சிலர் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். பலர் கைதாகி கொண்டு செல்லப்படுகிறார்கள். இவை அனைத்தும் ரகசியமாக நடப்பவை அல்ல. வெளிப்படையாகத்தான் நடக்கிறது. இதனை தமிழ்நாடு அரசு கண்டிப்பதைப் போல, இந்திய அரசு முதலில் கடுமையாகக் கண்டிக்க வேண்டும்.**

“இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் தொடர்ந்து சட்டவிரோதமாக மீன் பிடிப்பதற்கு இந்திய அரசும் ஆதரவளிக்கவில்லை என்பதையும் நாங்கள் அறிவோம்” என்கிறார் இலங்கை அமைச்சர். தங்களின் கொடூரத்துக்கு இந்திய அரசையும் பங்குதாரர் ஆக்கும் முயற்சி இது. இலங்கை அமைச்சரின் இந்தக் கூற்றை பா.ஜ.க. அரசு உடனடியாக மறுக்க வேண்டும். ‘இந்திய மீனவர்கள் சட்டவிரோதமாக மீன் பிடிக்கவில்லை’ என்பதை பா.ஜ.க. அரசு உறுதி செய்து இலங்கை அரசுக்கு கடிதம் அனுப்ப வேண்டும். இன்னொரு நாட்டின் அமைச்சர், இந்திய மீனவர்கள் மீது அவதூறான, வஞ்சம் தீர்க்கும், பழி சொல்லும் குற்றச்சாட்டுகளை வைக்கும் போது அதனை மறுக்க வேண்டிய கடமை இந்திய அரசுக்கு இருக்கிறது.

**அதேபோல், கச்சத்தீவில் இந்தியாவின் உரிமையை ஒன்றிய பா.ஜ.க. அரசு நிலைநாட்டும் முயற்சிகளைத் தொடங்க வேண்டும். ‘கச்சத்தீவை தாரை வார்த்து விட்டார்கள்’ என்று பொங்கிக் கொண்டிருக்கிறது பா.ஜ.க. அரசு. அது உண்மையாக இருந்தால் இலங்கை அரசுடன் கச்சத்தீவு தொடர்பான பேச்சுவார்த்தையை பிரதமர் மோடி அவர்கள் தொடங்க வேண்டும்.**

“கச்சத்தீவை தாரை வார்த்துக் கொடுத்தது குறித்த புதிய உண்மைகள் வெளிப்பட்டு உள்ளன. இது ஒவ்வொரு இந்தியனையும் கோபப்படுத்தி இருக்கிறது” என்று பிரதமர் மோடி அவர்கள் 31.3.2024 அன்று சொன்னார்கள். அது அவரது உண்மையான கோபமாக இருந்தால், இப்போது இலங்கை அமைச்சர் சொன்னதும் அவரைக் கோபம் கொள்ள வைத்திருக்க வேண்டும்.

“அன்றைய ஆளும் கட்சியின் அலட்சியத்தால் கச்சத்தீவு தாரை வார்க்கப்பட்டது. இதனால் ஏழை மீனவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். அந்தக் கட்சிகள் மீனவர்களை வஞ்சிக்கிறது. மீனவர்களுக்காக அவர்கள் எதையும் செய்யவில்லை. மீனவர்களுக்கு அவர்கள் துரோகம் செய்துள்ளனர்” என்று கண்ணீர் வடித்தார் பிரதமர் மோடி. இதோ, அவருக்கு ஒரு வாய்ப்பு வந்துள்ளது. மீனவர்களுக்கு நன்மை செய்ய ஒரு வாய்ப்பு வந்துள்ளது. இந்த வாய்ப்பை பயன்படுத்த வேண்டும்.

**“தமிழ்நாட்டு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டிடவும், இலங்கை கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்களுக்கு ஏற்படும் அனைத்து இன்னல்களுக்கும் கச்சத்தீவை மீண்டும் பெறுவதே நிரந்தரத் தீர்வாக அமையும். இதனை கருத்தில் கொண்டு, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்து, கச்சத்தீவைத் திரும்பப் பெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் ஒன்றிய அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும்” என்று இந்த சட்டமன்றப் பேரவை வலியுறுத்துகிறது என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்”** என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்மொழிந்து நிறைவேற்றிய தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த முயற்சியை ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடங்க வேண்டும்.

இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் பேச்சுக்கு இந்திய அரசு எதிர்வினை ஆற்ற வேண்டும். இந்திய மீனவர்கள் மீது குற்றம் சாட்டும் இலங்கை அமைச்சரை இந்திய அரசு கண்டிக்க வேண்டும். கச்சத்தீவின் இந்திய உரிமையை நிலைநாட்ட பேச்சுவார்த்தை தொடங்க வேண்டும்.

**செய்யுமா ஒன்றிய பா.ஜ.க. அரசு?**



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் கழக அயலக அணி நிர்வாகிகள் நேரில் சந்தித்து இன்று (8ஆம் தேதி) சேலத்தில் நடைபெறவுள்ள கழக அயலக அணியின் மாநில, மாவட்ட அமைப்பாளர்கள் கலந்தாய்வுக் கூட்டத்திற்கான அழைப்பிதழை வழங்கி வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்வில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினரும், கழக அயலக அணித் தலைவருமான டாக்டர். கலாநிதி வீராசாமி, அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா, துணை அமைப்பாளர்கள் பரிதி இளம் சுருதி எம்.சி., புகழ்காந்தி, கன்னிகை ஸ்டாலின், திருமதி. உமாராணி, முத்துவேல் ராமசாமி, பாபு வினிபிரட் ஆகியோர் உடனிருந்தனர்.

# திருச்சியில் - பள்ளிக்கல்வித் துறை சார்பில் முப்பெரும் விழா!

## அமைச்சர்கள் கே.என்.நேரு - அன்பில் மகேஸ் பொய்யாமொழி சான்றிதழ்களை வழங்கினர்!

திருச்சி, ஜுலை 8-

திருச்சிராப்பள்ளி தேசியக் கல்லூரி மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் நேற்று முன்தினம் (06.07.2025) நடைபெற்ற முப்பெரும் விழாவில் அறிஞர் அண்ணா தலைமைத்துவ விருது மற்றும் ரூபாய் 10 இலட்சம் ஊக்கத்தொகையுடன் தலைமையாசிரியர்களுக்கான விருதுகளையும், பேராசிரியர் அன்பழகன் விருது மற்றும் கற்றல் அடைவுக்கான 100 நாள் சவாலில் பங்கேற்ற பள்ளி தலைமையாசிரியர்களுக்கு கேடயம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் வழங்கினார்கள்.

தமிழ்நாடு அரசின் வழி நின்று அரசுப் பள்ளிகளில் கல்வி, விளையாட்டு, மாணவர் மேம்பாடு, பள்ளி உட்கட்டமைப்பு, பள்ளி மேலாண்மை குழுவின் செயல்பாடு, இல்லம் தேடிக் கல்வி திட்டம் என பல்வேறு அரசின் முதன்மையான திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்திய தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளைச் சார்ந்த 100 பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு அறிஞர் அண்ணா தலைமைத்துவ விருதுடன் தலா ரூபாய் 10 இலட்சம் வீதம் ரூபாய் 10 கோடி ஊக்கத்தொகையும்மேலும் கற்றல் கற்பித்தல் ஆசிரியர் திறன் மேம்பாடு தலைமைத்துவம் மாணவர் வளர்ச்சி என பன்முக வளர்ச்சியினை வெளிப்படுத்தும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளைச் சார்ந்த சிறந்த 76 பள்ளிகளுக்கு,பேராசிரியர் அன்பழகனார் விருது களும் மற்றும் 38 உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு தலா ரூபாய் 10 இலட்சம் வீதம் உட்கட்டமைப்பு பராமரிப்பு நிதியும் அமைச்சர் பெருமக்கள் வழங்கினார்கள்.

தொடர்ந்து, மொழி அறிவில் எப்போதும் சிறந்து விளங்கும் தமிழ்நாடு அரசுத் தொடக்கப் பள்ளிகளில் 100 நாட்களில் 100 விழுக்காடு தமிழ் மற்றும் ஆங்கிலத்தை மாணவர்கள் வாசிக்கவும் கணக்கு பாடத்தில் அடிப்படை திறனை முன்னேற்றம் அடையச் செய்யவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அவ்வாறே செய்து முடித்த 4552 தொடக்கப் பள்ளிகளைச் சார்ந்த ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்களையும் மேலும் பல்லுயிர், நீர் மேலாண்மை கழிவு மேலாண்மை உணவு மற்றும் ஆற்றல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு பள்ளி வளாகங்களில் பசுமை நடவடிக்கைகளை மேற்கொண்ட சிறந்த பள்ளிக்கு மிஷன் இயற்கை விருதுகளை யும் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் வழங்கி பாராட்டினார்கள்.

### அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!

இதில் அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்ததாவது :-

ஆசிரியர்கள் என்னகற்பித்தார்களோஅதைமனதில் வைத்துதேர்வுஎழுதிதான் நான் தேர்வில் வெற்றி பெற்றுள்ளேன். புத்தகங்களை தொட்டதே கிடையாது. விவசாயத்தை பார்க்க வேண்டும் என தந்தை அழைத்ததால் கல்லூரி படிப்பை முடிக்காமல் நான் சென்று விட்டேன். ஆனால் கல்லூரி படிப்பு படித்திருந்தால் ஆங்கில அறிவு கிடைத்திருக்கும் என பலமுறை நினைத்திருக்கிறேன். ஆனால் எங்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அதைத் தாண்டியும் பயிற்சி அளித்துள்ளார். அதிகாரிகளோடு எப்படி பேச வேண்டும் மற்றவர்களோடு எப்படி பேச வேண்டும் என எங்களுக்கு பயிற்சி அளித்துள்ளார். ஆசிரியர்களை எப்போதுமே கலைஞர் அவர்கள் இன்முகத்துடன் பார்த்துவரவேற்பார். அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் செய்துகொடுப்பார். ஆசிரியர்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்தவர் கலைஞர் அவர்களை சீராட்டி பாராட்டி வளர்த்தவர் கலைஞர்.

தமிழ்நாட்டில் அதிகமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது பள்ளிக் கல்வித் துறைக்கு தான். ரூபாய் 45 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி பள்ளிகளில் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் மாணவர்கள் சேர்ந்துள்ளார்கள். அரசு பள்ளி வறுமையின் அடையாளம் அல்ல, பெருமையின் அடையாளம் என அமைச்சர் கூறுவார். அதற்கு ஏற்ப அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை அதிகமாக நடந்துள்ளது. ஒருவர் எந்த உயரத்திற்கு சென்றாலும் அதற்கு அடித்தளம் இடுவது ஆரம்பகல்வியே. ஆரம்பப் பள்ளியில் நன்றாக கற்றுத் தருவது தான் ஒரு மாணவன் அடையும் அனைத்து வெற்றிக்கும் காரணமாகும். தனியார் பள்ளியில் கல்வி பயின்றவர்களைவிட அரசு பள்ளியில் கல்வி பயின்ற பலர் உயர்ந்த நிலையை அடைந்துள்ளார்கள்.

இவ்விருதுகள் வழங்குவதன் மூலம் சிறந்த பள்ளிகள், தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் பெருமைகளை ஊக்குவிப்பதன் மூலம் ஒட்டுமொத்த அரசுப் பள்ளிகளின் கற்றல் சார்ந்த நடவடிக்கைகளுக்கான அங்கீகாரத்தை தமிழ்நாடு அரசு இந்த நேரத்தில் முழுமையாக அளித்து அவர்களை ஊக்கப்டுத்துகிறது. இதனால் இன்றைய மாணவ சமுதாயம் நாளைய உலகை ஆள்வார்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேச்சு!

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்ததாவது :-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசின் திட்டங்களை பள்ளிகள் எவ்வாறு செயல்படுத்துகிறது என்பதை கண்காணித்து அதில் சிறப்பாக செயலாற்றிய 100 அரசுபள்ளிகளுக்கு அண்ணா தலைமைத்துவ விருதும் வழங்கப்படுகிறது. அதேபோல கற்றல், கற்பித்தல், செயல்பாடு உள்ளிட்டவற்றில் சிறப்பாக பங்களித்த 76 பள்ளிகளுக்கு பேராசிரியர் அன்பழகன் விருது வழங்கப்படுகிறது. கற்றல் அடைவுக்கான நூறு நாள் சவாலில் பங்கேற்று சிறப்பாக பங்களிப்பு செய்த 4552 பள்ளிகளுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கப்படுகிறது. ஏற்கனவே 4552 பேர் சிறப்பாக பங்களித்த நிலையில் அதன் தொடர்ச்சியாக இன்று 12685 தலைமையாசிரியர்கள் சவாலுக்கு நாங்கள் இன்றுதயாராக இருக்கிறோம் என வெளிப்படையாகவே தெரிவித்துள்ளார்கள்.

பல ஆய்வுகள் பள்ளி கல்வித்து றையில் செய்கிறார்கள். அதுகுறித்தெல்லாம் நாம் கவலைப்பட வேண்டாம். ஏற்கனவே ஒன்றிய அரசு ஏசர் என்கிற அமைப்பு ஆய்வறிக்கையை தாக்கல் செய்தது அது குறித்து எல்லாம் நம்ப வேண்டாம் என நான் ஏற்கனவே கூறியு ள்ளேன். தமிழ்நாடு அரசு மாநில திட்டக்குழுகற்றல் அடைவு அறிக்கைதான் சரியான ஆய்வறிக்கையாக உள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று தலைமை ஆசிரியர்களையும், ஆசிரியர்களையும் ஊக்கப்படுத்தும் விதமாக பல்வேறு செயல்பாடுகளை செய்துவருகிறோம். ஒவ்வொரு திட்டத்தையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்த்துபார்த்து செய்து வருகிறார்கள். தலைமை ஆசிரியர்களின் கரத்தை வலுப்படுத்தும் விதமாகத்தான் பல திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றி வருகிறார்கள்.

அறிவியல் சார்ந்த சமுதாயமாக இந்த சமுதாயத்தை மாற்ற வேண்டும் என்றால் அதை ஆசிரியர்களால் தான் உருவாக்கமுடியும் என்பதை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உளபூர்வமாக நம்பி வருகிறார். இருமொழிக் கொள்கையை அண்ணா உயர்த்திப் பிடிக்கவில்லை என்றால், இன்று நாம் நம்முடையதாய் மொழியான தமிழ் மொழியை இழந்து இருப்போம். ஏதோ ஒரு மொழிக்கு அடிமைப்பட்டு நாம் உரிமைகளை இழந்த கூட்டமாக இருந்திருப்போம். சமச்சீர் கல்வித்திட்டத்தை கொண்டுவரும் பொழுது அதற்கு அதிகமான ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அளித்தவர் அப்போதைய நிதி அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரிலும், பேராசிரியர் அன்பழகன் பெயரிலும் விருதுகள் வழங்கப்படுகிறது. இது உங்களை கௌரவப்படுத்தும் நிகழ்வு. உங்களை கௌரவப்படுத்துவதன் மூலம் நாங்களும் பெருமைஅடைந்து கொள்கிறோம்;. விருது பெற்ற ஆசிரியர்களுக்கும், தலைமையாசிரியர்களுக்கும் பாராட்டுதலையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிகழ்வில், பள்ளிக் கல்வித்துறை அரசு முதன்மைச் செயலாளர் மரு.ப.சந்தர மோகன் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன் , முசிறி சட்டமன்ற உறுப்பினர் ந.தியாகராஜன், மண்டல குழு தலைவர் மு.மதிவாணன், பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ், இணை இயக்குநர்கள் திருமதி.சசிகலா, ராஜேந்திரன், சாமிநாதன், மாமன்ற உறுப்பினர் கே.பன்னீர்செல்வம், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், தலைமையாசிரியர்கள் கலந்து கொண்டனர்.




நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் நேற்று முன்தினம் (06.07.2025) திருச்சிராப்பள்ளி தேசியக் கல்லூரி மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் நடைபெற்ற விழாவில், அறிஞர் அண்ணா தலைமைத்துவ விருது மற்றும் ரூபாய் 10 இலட்சம் ஊக்கத்தொகையுடன் தலைமையாசிரியர்களுக்கு கேடயம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்கள். இந்நிகழ்வில், பள்ளிக் கல்வித்துறை அரசு முதன்மைச் செயலாளர் மரு.ப.சந்தர மோகன், மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், முசிறி சட்டமன்ற உறுப்பினர் ந.தியாகராஜன், மண்டல குழு தலைவர் மு.மதிவாணன், பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ச. கண்ணப்பன், தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், தலைமையாசிரியர்கள் கலந்து கொண்டனர்.